ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த நாச்சியார் திருமோழி

# 1 – தையொரு திங்கள்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1 – தையொரு திங்கள்

‡ தை ஒரு திங்களும் தரை விளக்கித் ⋆
தண் மண்டலம் இட்டு மாசி முன்னாள் ⋆
ஐய நுண் மணல் கொண்டு தெரு அணிந்து ⋆
அழகினுக்கலங்கரித்தனங்கதேவா ! ⋆
உய்யவும் ஆங்கொலோ என்று சொல்லி ⋆
உன்னையும் உம்பியையும் தொழுதேன் ⋆
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக் கை ⋆
வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே ‖ **1.1** ‖

வெள்ளை நுண் மணல் கொண்டு தெரு அணிந்து ⋆
வெள்வரைப் பதன் முன்னம் துறை படிந்து ⋆
முள்ளும் இல்லாச் சுள்ளி எரி மடுத்து ⋆
முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா ⋆
கள் அவிழ் பூங்கணை தொடுத்துக்கொண்டு ⋆
கடல் வண்ணன் என்பதோர் பேர் எழுதி ⋆
புள்ளினை வாய் பிளந்தான் என்பதோர் ⋆
இலக்கினில் புக என்னை எய்கிற்றியே ‖ **1.2** ‖

மத்த நன் நறு மலர் முருக்க மலர் கொண்டு ⋆
முப்போதும் உன்னடி வணங்கி ⋆
தத்துவம் இலி என்று நெஞ்செரிந்து ⋆
வாசகத்தழித்துன்னை வைதிடாமே ⋆
கொத்தலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு ⋆

கோவிந்தன் என்பதோர் பேர் எழுதி ⋆
வித்தகன் வேங்கட வாணன் என்னும் ⋆
விளக்கினில் புக என்னை விதிக்கிற்றியே ॥ **1.3** ॥

சுவரில் புராண ! நின் பேர் எழுதிச் ⋆
சுறவ நற் கொடிக்களும் துரங்கங்களும் ⋆
கவரிப் பிணாக்களும் கருப்பு வில்லும் ⋆
காட்டித் தந்தேன் கண்டாய் காமதேவா ⋆
அவரைப் பிராயம் தொடங்கி ⋆
என்றும் ஆதரித்தெழுந்த என் தட முலைகள் ⋆
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத் ⋆
தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே ॥ **1.4** ॥

வானிடை வாழும் அவ்வானவர்க்கு ⋆
மறையவர் வேள்வியில் வகுத்த அவி ⋆
கானிடைத் திரிவதோர் நரி புகுந்து ⋆
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப ⋆
ஊனிடை ஆழி சங்குத்தமர்க்கென்று ⋆
உன்னித்தெழுந்த என் தட முலைகள் ⋆
மானிடவர்க்கென்று பேச்சுப் படில் ⋆
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே ! ॥ **1.5** ॥

உரு உடையார் இளையார்கள் நல்லார் ⋆
ஓத்து வல்லார்களைக் கொண்டு ⋆
வைகல் தெருவிடை எதிர் கொண்டு ⋆
பங்குனி நாள் திருந்தவே நோற்கின்றேன் காமதேவா ⋆
கரு உடை முகில் வண்ணன் காயா வண்ணன் ⋆
கருவிளை போல் வண்ணன் கமல வண்ணத் ⋆

திரு உடை முகத்தினில் திருக் கண்களால் ⋆
திருந்தவே நோக்கெனக்கருள் கண்டாய் ॥ **1.6** ॥

காய் உடை நெல்லொடு கரும்பமைத்துக் ⋆
கட்டி அரிசி அவல் அமைத்து ⋆
வாய் உடை மறையவர் மந்திரத்தால் ⋆
மன்மதனே ! உன்னை வணங்குகின்றேன் ⋆
தேசமுன் அளந்தவன் திரிவிக்கிரமன் ⋆
திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம் ⋆
சாய் உடை வயிறும் என் தட முலையும் ⋆
தரணியில் தலைப் புகழ் தரக்கிற்றியே ॥ **1.7** ॥

மாசுடை உடம்பொடு தலை உலறி ⋆
வாய்ப் புறம் வெளுத்தொரு போதும் உண்டு ⋆
தேசுடைத் திறல் உடைக் காமதேவா ! ⋆
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய் ⋆
பேசுவதொன்றுண்டிங்கெம் பெருமான் ⋆
பெண்மையைத் தலை உடைத்தாக்கும் வண்ணம் ⋆
கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள் என்னும் ⋆
இப்பேறெனக்கருள் கண்டாய் ॥ **1.8** ॥

தொழுது முப்போதும் உன்னடி வணங்கி ⋆
தூ மலர் தூய்த் தொழுதேத்துகின்றேன் ⋆
பழுதின்றிப் பார்க் கடல் வண்ணனுக்கே ⋆
பணி செய்து வாழப் பெறாவிடில் நான் ⋆
அழுதழுதலமந்தம்மா வழங்க ⋆
ஆற்றவும் அது உனக்குறைக்கும் கண்டாய் ⋆

உழுவதோர் எருத்தினை நுகங்கொடு பாய்ந்து ⋆
ஊட்டம் இன்றி துரந்தால் ஒக்குமே ॥ **1.9** ॥

‡ கருப்பு வில் மலர்க் கணைக் காம வேளைக் ⋆
கழல் இணை பணிந்தங்கோர் கரி அலற ⋆
மருப்பினை ஒசித்துப் புள் வாய் பிளந்த ⋆
மணிவண்ணற்கென்னை வகுத்திடென்று ⋆
பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் ⋆
புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை ⋆
விருப்புடை இன் தமிழ் மாலை வல்லார் ⋆
விண்ணவர் கோன் அடி நண்ணுவரே ॥ **1.10** ॥

அடிவரவு — தை வெள்ளை மத்தம் சுவரில் வானிடை உரு காயுடை மாசுடை தொழுது கருப்பு நாமம்

தையொரு திங்கள் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்